ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மணவாளநாராயண சதகம்.

என்கின்ற

திருவேங்கடசதகம்.

வெண்மணி.

நாராயணபாரதியார்

அருளிச்செய்தது.

இஃது

பூவிருந்தவல்லி.

கபினியப்ப முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

ஆ அண்ணாமலை முதலியார்

அவர்களின்தமது

அருட்பிரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1881

௧௮௮௨ (வரு). பிவர்வரி மீ

1881

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

தனியன்.

ஓங்கு தண்டலைசூழு மேகமனை தேன்சொரியு
        மோமனூர் வேங்கை பூபன்
உதவுமணவாள நாராயணன் களமூரி
        னுலககீர்த்தி கேட்கமுன
தேங்குசீர் வயல்சூழும் வெண்பணியில் வாழுமுயர்
        செல்வன் முத்தா ணாயனூர்
செழுந்தவ முதித்த நாரணப் பாரதிபுக
        திருவேங்கட சதகமே
பரங்குபெறு முலகுளோர்க் கிருகண்மணி யகவிருட்
        பானுவிரு வழிவிழிய தாம
பவக்கடல் கடக்கவரு வங்கமாம் பொங்கு மொளி
        பாவுமெய்ஞ் ஞான வழியாம்
ஈங்கிக பாத்துணைய தாமிதை படிப்பவர்க
        ளியல் வேங்கடே சுரான்றன்
இசையருளை யுற்றுநல மேபெருகி வாழுமவ
        ரொழுபொன்மலை போல் வாழ்வரே.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மணவாளநாராயணசதகம் என்கிற

திருவேங்கடசதகம்.

காப்பு-வெண்பா.

செந்திருவாழ் மார்பன் றிருவேங் கடசதகம்
பைந்தமிழா னீதிநெறி பாடவே - வந்தருளும்
கார்முகமுஞ் சங்கத்தான் கைத்தா மரையணிந்த
கார்முகமுஞ் சங்கத்தான காப்பு.

கடவுள் வாழ்த்து.

பூமேவு திசைமுகனை யுந்திதனி லீன்றதும் புநிதவேதாகமமெலாம்,
புருஷோத்த மன்றெய்வ மென்பதும் பூசுரர்கள் புரியுமந்திர கருமமும்,
தேமேவு மலர்மங்கை மார்பில்வளர்சீருஞ் செகந்தனைக் காத்தருள்வதும்,
தேவர்முதன் மிருகசெந்து பட்சிசிலைமாமுஞ் செழிக்கப் பதந்தருவதும்,
பார்மேவு பொருளலங் காரஞ்சிறப்பதும் பலவிதமு நீயென்றதாற், பர
தெய் முண்டென றிருப்பார்களெந்நூல் படித்தவிதமோ தெரிகிலேன்,
மாமேவு பைந்துளப மாலையணிமார்பனே மணவாளநாராயணன், மனதி
லுறைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (க)

அந்தணர் சிறப்பு.

சீலமிகுமாகம புராணமனுநீதியுந் தேர்ந்துமெய்ஞ் ஞானநிறைவார்,
செய்கின்றயாகாதி மந்திரகருமங்களாற் றேவர்க்கு முதவிசெய்வார், கா
லமுதலாகிய ப்ரமாணங்கள்கையினிற் கனிபோலவே காட்டுவார், காயத்
திரிமகிமையாற் சகலதீவினையெலாங் கனலிட்டபஞ்சுசெய்வார், ஞாலமி
சைதிங்கண்மும் மாரியுங்கொற்றவர் நடத்துசெங்கோல் வளமையும், நா
டுகள் செழிப்பதுஞ் சகலதருமமும் வேத நாயகர்மகத் துவங்காண், வால
கருடன்பண்டு கண்டகதையல்லவோ மணவாளநாராயணன், மனதிலு
றைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உ)

அரசர் சிறப்பு.

சீருலவு மனுநீதி மந்திரிசொற்றனபுத்தி தேசத்தியற்கை நான்கும்
சேர்ந்துசெவி விழிமனமு மூன்றினும் பொறுமையே சேர்ந்துசெங் கோல்
செலுத்தி, தாருலவுகாலமுங் குமுதமுங் காலங்கள் சார்ந்துமலர் கின்ற
விதமும், சந்தியொடு முதலைபொரு தானபலமுங்கண்டு தரியலரைவெற்
றிகொண்டு, பாருலவு கொடிசேனை தனதானியஞ்சகல பாக்கியமு மிகவிள
ங்கப், பற்பலதன்மங்களொடு கீர்த்திப்ரதாபமும் படைத்ததிறலோ னர
சனும், வாருலவுமலர்மங்கை மனமகிழ்நாதனே மணவாளநாராயணன்,
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே- ()

வணிகர் சிறப்பு.

திடமுடன்றன்மன தறிந்துவாணிபம்தே செய்வாதாயமிஞ்சி, செ
லவுசெய்யார்யாவர் வருகினுங்கண்டபடி தேர்ந்துவிலை போலுரைப்பார்,
அடகுதந்தாலுமரி யாதையில்லார்க் கணைகாசுக் கடனுமுதவார், ஆனம
னுநீதியுடை யோர்களுரை வாய்மையா ளளவிலாப்பொருள் கொடுப்பார்,
கடுகுதனிலெட்டிலொரு கூறுவாயெனினுங் கணக்குமுறை தன்னில்வழு
வார், காரியவிசேஷமதி லொருகோடி யுதவுவார் கருணைவர்த்தகர் பெரு
மைகாண், வடமலை தினம்பரவு தென்மலைக் கதிபனே மணவாள நாராய
ணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே வரதவேங்கடரா
யனே. (௪)

வேளாளர் சிறப்பு.

அந்தணர்கள்கருமமுஞ் சகராசர்புசபலமு மவனிவர்த் தகலாபமும்,
அனைவர்க்குமேன்மையுந் தருமமுந்தானமு மன்பின்மங் கையரின்பமும்,
புந்திதெளிநியமமுஞ் சாத்திரமுமாகம புராணமொடு சகலகலையும், பொ
ய்யாதவுண்மையுங் கீர்த்திப்பிரதாபமும் புகழ்கின்ற தேவர்நிலையும், விந்
தைபுரிமானமுங் குலமரபு நீதியும் விதரணமு தற்சகலமும், வேளாளர்
குவலைபுனை காராளர்தங்களிட மேழியின் பெருமையன்றோ, மந்தரமெ
னும்புயச வுந்தர முகுந்தனே மணவாள நாராயணன், மனதிலுறை யலர்
மேலு மங்கைமண வாளனே வரதவேங் கடராயனே. (௫)

புருஷராய்ப் பிறந்தோர் பெறும்பயன்.

புருஷராய்ச் சனனம தெடுத்தபேர் மெய்ஞ்ஞான போதத்தையறிவ
தொன்று, பூமியொடு மிக்கதன வானவ தொன்றலது பூவலஞ்செய்வதொ
ன்று, தருமவா னென்றுமிகு கீர்த்திமா னென்றுநற் சற்குண விவேகியொ
ன்று, சகலரும் புகழ்கின்ற வித்துவானென்றுரண சங்கிராமவீரனென்று,
கருணைசே ரிந்தவகை யிலலாத மனிதனைக் காசினியிலேன் படைத்தாய்,
கருதுதாயுதரமும பார்க்கின்ற பேர்களிரு கண்களுஞ் செய்தவினையோ,
மருவுலாவியதுளப மாலையணிமார்பனே மணவாளநாராயணா, மனதி
லுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬)

நகரச்சிறப்பு.

பரதகீதப்ரபல வேசியர்களாடலும் பாடலும்பெருகோயிலும், பல
வாவிமண்டபங் கோட்டையர ணங்களொடு பலர்போவு கடைவீதியும்,
இரதகஜதுரகம் பதாதிசதுரங்கபல மேற்கின்ற தளகர்த்தனும், எண்ண
ரிகுமந்திரி ப்ரதானிதானபதி யரியலுத் தியோகசனமும், விரதமறை
யோராதி நாற்குலமு மொன்றென்று மிககசோடசதானமும், மேலாய்ச்
சமீபித்த நதியுமாய்மனுநீதி வேந்தனும் பெறுபட்டணம், வரதருறை
சிரங்க பட்டண மெனச்சொல்வர் மணவாள நாராயணன், மனதிலுறை
யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௭)

அரசர்க்குரிய தொழிலாளரியல்பு.

காரியாகாரியங் கொற்றவர் தெரிந்திடக் கண்டுசொல் வோனமந்திரி, காலமுந்தன்பலமு மெண்ணிமிகல் வென்றிடக் கருதுவோன் றளகர்த்தனும், சீரியதனங்களொடு சாக்ஷியஞ்சகலமுந் திட்டமிடுவோன் பிரதானி, செயபவாசகதாடி யவைதானவங்கணை சிறக்குமவனே ராயசவன், சூரியன்றிசைமாறினுந்தான் றொடுத்தவத் தொகைவிடான் கருணீகனும், சொல்வண்மை சபைவண்மை பரராசர் வண்மைதெரி சுமுகனே தானாபதி, மாரியது காத்தருளு மணிமேக வண்ணனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (அ)

இதனாலிஃதுளதாமெனல்.

அதிகார மதுவந்து சேரிலவ ருக்குமே யதிகவல் லமைகளுண்டாம், ஆடையாபரணங்கள் சேரிலவ ருக்குமே யழகுபெறு வளமையுண்டாம், நிதிமேவு செல்வமது சேரிலவ ருக்குமே நிறைகின்ற மேன்மையுண்டாம், நெஞ்சுமகிழ் விதரணஞ் சேரிலவ ருக்குமே நிலைபெற்ற கீர்த்தியுண்டாம், துதிமேவு பத்தியது சேரிலவ ருக்குமே தோன்றவரு தெய்வமுண்டாம், சுகமிக்க பருவமது சேரிலவ ருக்குமே துய்யமணவாசையுண்டாம், மதிசேரிலங்குமுத மலரா திருக்குமோ மணவாளநாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே வரதவேங்கடராயனே. (கூ)

அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்.

சுற்றமொடுதானுநம் பினபேரு மின்பமாய்ச் சுகமுறிற்புரவியமையும், துய்யதரு மங்களொடு கீர்த்திப்ரதாபந் துலங்கினாற் சிவிகையமையும், கொற்றவர்கண் மெய்ச்சவே பரராசர்கொடிவெற்றி கொண்டுவரிலானையமையும், குறையொன்றி லாமனிறை புகழ்பெற்ற வீரர்முன்கூறுங் கைவாளமமையும், உற்றவகை யிவையெலாம் வேந்தர்தன்மானமுட லுதவாமலேபெற்றிடில், உறைகொண்டநாடகந் தன்னில்வருகோலமுட னூர்வலஞ் செய்கோலமும், மற்றவர்கள் கோலமுஞ் சரியென்று சொல்வர்காண் மணவாள நாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே வரதவேங்கடராயனே. (ய)

பிதுர்வாக்கிய பரிபாலன முதலியவற்றால் வருநன்மை.

தந்தைதாய்வாக்கிய பரிபாலனம்புரிவதுந் தான்சொன்னபடிசெய்வதும், தவறாதவிரதமும் பொய்யாதவசனமுந் தானமுங்கனபெருமையும், சிந்தைமகிழ்மாமினோர் செய்தொழின்முடிப்பதுந் தேவதாவிசுவாசமும், செய்தபேர்பரசுராமன் கவசகுண்டலன் ஜெயராமனொடுவிடுமன், அந்தமிகுசொல்லரிச் சந்திரன்மாபலி யடறருமனொடுபகீரதன், அருள்பிரகலாதனிவர் பேர்பெறுங்கீர்த்தியொடு மவனிமிசை நீடுவாழ்வார், வந்தமார்போற்றவளர் சேஷகிரிவாசனே மணவாளநாராயணன் மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (யக)

ஞானமுதலியவற்றால் வருந்தீமை.

ஞானபெறு வித்தையும் பாதார மோகமுஞ் சோதரன் றனையிகழ்வ
தும், துலங்காத புத்தியு மடங்காத வார்த்தையுஞ் சொல்லிச்செய் யாத
திறமும், தீனபெறு வஞ்சமு மதங்களும் பிறருடைய திரவியந் தனிலா
சையும், சிந்தையக மெனுமகங் காரமும் பெற்றபேர் சீர்களன் கீசகன்
றான, மீதுபொருவாலிக கான்குமரனசிசுபாலன் வென்றியுத தான்வில்
வலன், விந்தைபெறு துரியோதனன் சனகன முனபெற்ற விதமுற் றிருப்
பர்கண்டாய், வாதுபெறு தானவரை மோதமொரு திகிரியாய் மணவாள
நாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்
கடராயனே. (௰௨)

சாதிமுதலானவைகளின் குணமே சிறந்ததெனல்.

கடவரையதன்மீது விளைபினுஞ் சோளமது சன்னசம்பாவாகுமோ,
சந்தமுள்ளாடா திருந்தாலு மெட்டிமலர் ஜாதிமல்லிகை யாகுமோ, கட
லைவிறைவெள்ள மாயினுஞ் சுவைபெற்ற காவிரியி னாற்றாகுமோ. கா
கர்சன் கோடிதொனி செய்தாலு மொருசிறு கருங்குயிற் றொனியாகு
மோ, படர்கினற பேய்ச்சுரை சொரிந்தபழ முந்திரிப் பழமதற் கிணையா
குமோ, பகர்கின்ற சாதியுங் கனவயது மேன்மையும் பலகூட்ட முந்தேக
மார், வடிவதி கமன்றுகுண மேயதிக மென்பர்காண் மணவாள நாராய
ணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே வரதவேங் கடரா
யனே. (௰௩)

செல்வத்தால் வருமுயர்வு.

செல்வது சேரினோ வெங்குபேர் வேங்கனுக் கிளாகில் வேங்கட
னுராசர், செயல்வரினச கொள்வேங் கடாசலனுமாமைய ராந்திரளையா
வர்கனாகுர், நலவரிசை கொண்டுவர னடத்திடுங் காரியம் நயந்தநுதாகு
மப்பால், நல்லோர்களினாக் கொடாப்பமே லொருவசன நவிலுமுன்
கப்பரிடுவார், செல்வன்மை வர்வென்ற பேர்வாரு மென்பார் சுவாமி
யாந் தேவரீராம், நிதிபெற்றதேவரீ ரவர்களாங் காணுமுன றெழுதே
முங் கருணுமெனபார், வல்லிதம பெறுபாம லோபியாகண் மீண்டனே
மணவாள நாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கடராயனே. (௰௪)

வறுமையால்வரு மிழிவு.

துதிக்கின்ற மனைவியுங் குறைசொல் லடங்கைதாய் சோகமுற வகை
கூறுவார், துணைபமொழி மனமெலிய மேனிவேற் றுருகமைந் தொலையாத
கவலைனைந்ம், உதிக்கின்றபுத்திய மழுங்கிடுங் கல்விபோ முதாரத்தி லதி
கமிபாம், உறவினமுறை யாருமொரு வார்த்தை சொல்லார் சொனன
வுத்தரமு மொருவாசொலார், விதிக்கின்ற வுலகத்தி லெல்லாரு மிகழு
வார் மிவெங்கு சேர்ந்திடுதன்ருல், மேன்மையே தகிவேது குலமேது நல
மேது வித்தையே தெவரறிவார்காண். மதிக்கின்ற வுன்பாதம் போற்றி
னைவேருமோ மணவாளநாராயணன், மனதிலுயைலர்மேலு மங்கை
மணவாளனே வரதவேங்கடராயனே. (௰௫)

உடனேகண்டிக்கப்படுவார்கள்

முடிகொண்ட கொலையாளர் களவினோர் சாதிநெறி முறைமைவழு கின்றதீயோர், மூர்க்கமுறு கையாளர் வெகுசன விரோதியாகமனை யொழிமாறு கோளுரைப்போர், மிடிகொண்ட பேழைக் கெடுத்துளோர் சற்புடைய பெல்லியலை மேவுமயலோர், விசுவாசகாதமிகு செய்குவோர துஷ்டரா மிருகங்கள் மிக்கபிணிகள், கடிகொண்ட விஷமுடன செய்யகன லென்னவே கருதுபதின மூன்றுவகையும், கண்டவுடனேபிழையெவெண்ணாது கண்டித்தல் கருணைமனு நீதிகண்டாய், வடிகொண்ட தெள்ளமுத மனையகுணசீலனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௰௬)

பொருத்துக் கண்டிக்கப்படுவர்கள்.

கண்டுநிரு பர்தனைத் தள்ளுவோர் குருசாமி காரியக்குறை செய்குவோர், காணுவிடத்திற் பழித்துளோர் வஞ்சகங் கருதுவோர் பொய்யுரைப்போர், சண்டையொடு தந்தைதாய் சுற்றமுட னனுதினந் தவிராத கலகமிடுவோர், தம்முடைய வலுவையா லெளியோர் வழக்கினுந் தவளியம தங்களுடையோர், அண்டிவரு துஷ்டரொடு கூடிவினை செய்குவோராகுமிவ ரெண்மர் தமையும், ஆறுபோன் மூன்றுபிழை கண்டபின கண்டிப்பதாசர்மனு நீதிகண்டாய், வண்டுலவுகின்றமலர் தண்டுளப மார்பனே மணவாளநாராயணனே, மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௰௭)

என்றுங்கண்டிக்கப் படாதவர்கள்.

ஆதாகி வந்தபேர் மிக்கதானபதியர் துதிபெற்ற தந்தைதாயார், சொல்லுமாசாரியர் புரோகிதர் புராணிகர் சுகந்தந்த போகமடவார், வேதாகமங்கற்ற வைதிகர் தபோதனர்கள் விகடப்ர சங்கமிடுவார், வித்தையா லுயர்கின்ற கவிராஜ சுத்தமண வீரமமேனி லுயர்ந்தோர், தீதான வெம்பிணி யடைந்துளோர் வறுமையோர் சிறுவரொடுதனை நம்பினோர், செய்யுமிவர் பதினெண்பர் மதியாத குற்றங்கள் செய்யினும் பொறுப்பதல்லால், வாதாடி யெதிர்செய்கை மன்னர்நெறி யன்றுகாண் மணவாளநாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௰௮)

இவர் இதனால் வெல்வரெனல்.

வேந்தருடனேவேந்தர் வாதுவரிலோர் கொடிகொள் வெற்றிகொண்டே செயிப்பார், வீரருடனேவீரர் வாதுவரிலாயுத விதத்திலே செயிப்பார், போந்திடு நியோகியர்கள் வார்த்தை யுசிதத்தாற் பொருந்தவே வாதுவெல்வார், புல்லர்க்கு வாதுவரின் மரபெலாம் வசைசொல்லிப் பொதுவிலக்காற் செயிப்பார், சாந்தமணி வேசியர்கள் வாதுவந்தாற்பாத சங்கீதமொடு செயிப்பார், சரசகவி ராசப்ர சங்கத்தினால்வாது தன்னைச் செயிப்பர்கண்டாய், மாந்தளிரை நிகர்மேனி தாதையதிமோகனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௰௯)

இக்குற்றத்தா விருபயன்படாதேனல்.

செயல்கொண்ட மானமது பங்கமானுற்றிருசெழித்தென்ன மாறிலென்ன, செய்பகுண வினபரச மில்லாத மங்கையைச் சேர்ந்தென்ன நீங்கிலென்ன, இயல்கொண்ட மரியாதை யில்லார்கடம்மை யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன, இடருற்ற போதுதவி செய்யாதபேர்நட் பிருந்தென்ன போயுமென்ன, கயல்கொண்ட விழியினுள் பேரிளம் பெண்கொங்கை காட்டிலென் மூடிலென்ன, கருணைகொண் டொருவருக் குதவாத பேர்வித்தை கற்றென்னமறைக்கிலென்ன, வயல்கொண்டபயிர்பேணி புயல்கொண் டகளமூரின் மணவாள நாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங் கடராயனே. (உ௦)

இவையெல்லா மளவுபடினு மாசையளவு படாதெனல்,

பொங்குநதி மணலுமா காயத்தி னெல்லையும் பொழியுமழை யின்றிவலையும், புடவிமிசை வருசனமு மடவிமிசை வளர்மரமும் பொருப்பின்மிசை யுற்றசிலையும், திங்களுட னுற்றதா ரகைகணமு முன்பாத சேவை செய்வோர் பெருமையும், தெரிவையர்கண் மனமுமுனி நினையாத பல மூடர் சென்மமுங் கடலாழமும், அங்கசன்கணைபுரியு மோசமுங் கவிராச வருள் பெற்ற புத்திநலமும், அளவுகண் டாலுமோ மனிதருறு மாசைதனை யளவிட கூடாதுகாண், மங்கைமிதுலாபுரி மடந்தைமகிழ் நேயனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உக)

இன்னார்க்கு இதுவில்லையெனல்.

காதன்மிகுகாமுகர் தமக்குமுறை யில்லைவஞ் சகர்க்குமரி யாதையில்லை, கட்டுண்ட கள்வருக் குறவின்முறை யாரில்லை கசடர்க்கு மானமில்லை, வேதமறிபூசுரர் தமக்கருள் செயாரில்லை விரோதிகரு நேயமில்லை, மெய்ஞ்ஞா னியர்க்குவரு சாதிகுல மொன்றில்லை வீரர்க்குமன் பயமுமில்லை, போகமிகு யோகிக்கு வினைசெய்கு வாரில்லை பொய்யர்முன் சாட்சியில்லை, புலவர்க்கு நேயமில் லாரில்லை செல்வரைப் போற்றிலா ரொருவரில்லை, மாதரெழில் கண்டுமன மகிழாதபேரில்லை மணவாளநாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உஉ)

இது இவ்வாறாயின் இதுவாமென்றல்.

எழுதினது சொல்வதே நாயரொப் பந்தனக்கிசையுமவளே ரம்பையா, மிடர்வேளையுதவுமவனேகர்னன்வழிநடைக் கேற்றதே யுற்றவசுலம், பழியெனமறிய மவனேபூசி மந்திரிநற் பயனீக்கி ஞேன்றந்தையாம், பசியிற்கிடைத்ததே யமுதமாந் துயிலினோர் பட்டதே புஷ்பசயனம், நிழறந்து காத்ததே கற்பகந்தாகத்தி லீரதந்ததே கங்கையாம், நிறைபிணி தவிர்த்ததே சஞ்சீவிதன்மட்டு நீசகுநீரே கடலதாம், மழைமுகி லெழுந்தனைய மெய்யனே துய்யனே மணவாள நாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உ௩)

இவர்க்கு இது தெய்வமெனல்.

தீதுபுரிலோபியர் தமக்குப்பணங்களே தெய்வமாங் காமுகர்க்கு, தெரி

வையர்கடெய்வமாந்துஷ்டருக்கென்னிலோ தீமையேதெய்வமாகும், நீதியுடையோர்க்குப் பயந்தீர்த்திரட்சித்த நேயரோதெய்வமாகும், நீங்காதரித்திரர் தமக்குககொடுத்தபேர் நித்தமுந்துதிதெய்வமாம, சாதியனைவர்க்குமறை யோதெய்வமப்புவி தனக்கரசனே தெய்வமாம், சகலர்க்குமாசாரியன்றெய்வநாரியர் தமக்குநாதன்தெய்வமாம், மாதலம்புரிஞா னியர்கருநீ தெய்வமா மணவாளநாராயணன, மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உ௪)

இது உண்டாயினும் இது இல்லாவிடிற் பயனில்லையெனல்.

எத்தனை பொருட்சுவை யிருக்கினும் பத்திரச மில்லாதகவிகளென்ன, எண்கோடிசம்பளந் தருகினுஞ்சன்மான மில்லாதசேவகமென, சித்ராஇலீலைபல செய்யினுமிதழுண்டு சேராதசுகமதென்ன, செம்பொன்மிகு செல்வமுண் டாயிலும்பயிர்கொண்ட செயலிலாவளமையென்ன, மெய்த்துளசியில்லாத நந்தவனமென்னவே விளங்குமென பார்கள்கண்டாய், மத்தகஜராஜனமகிழ் விஜயநரசிங்கனே மணவாளநாராயணன, மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உ௫)

இது இச்சிறப்படையினும் பயனில்லையெனல்.

காட்டிலிண்டஞ்செடி தழைத்தென்னகாஞ்சிரங் கனியதுசெவக்கிலென்ன, கனாநாணலெல்லா மலர்ந்தென்னகாகங் கழுத்தடிவெளுக்கிலென்ன, ஆட்டின்கழுத்திலதர்நீண்டுவென்னநீர்ப்பாசியதுபச்சையாகிலென்ன, அற்பருக்கதிகாரம் வந்தென்னபேடிகைகயி லாயுதமிருந்துமென்ன, நீட்டமொடுகரடிக்கு மயிர்வளர்ந்தாலென்ன நீதியறியாதமூடர், நிறைசெல்வராயென்ன ஞானமில்லாக்கல்வி நெறிபோலிருக்குமென்பார், வாட்டடங்கண்ணிபுனை கன்னிமகிழ்தேவனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உ௬)

கலியுகதோஷம்-

அம்புவியின்மிக்கமெய்ஞ் ஞானியைக்கண்டாலு மதுவுமொருவேஷமென்பார், ஆகமபுராணமறு நூல்விரும்பார்கள் பரியாசத்தையேமெச்சுவார், கப்பமிலைசயொருகோடி சரணமிட்டாலுமது கண்கட்டுவித்தையென்பார், கற்பனையலங்கார மாக்கவிதைபாடினுங் கற்றவர்க்கெளியதென்பார், நம்பிவிசுவாசமொடு துதிசெய்யினுங்கள்ள ஞானமென்பார்களவைபோல், நயந்தகலியுகமகிமை நின்னையுஞ்சிலபேர் நவின்றுகுறை சொல்வர்கண்டாய், வம்பவிழ்மலர்ச்சோலை மலையலங்காரனே மணவாளநாராயணன் மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (உ௭)

அரசரது நடையறியாமை.

அரசனைக்கண்டுபின் காரியக்காரருக் கதிகபரிதானமுதவி, அதிகாரமொன்றனைப் பார்ப்பவனிடத்தினு மதுக்கொட்டிகொட்டியிருந்தும், கருததிலுறைவப்பனைத் தலைணைப் பணங்கண்முன கடன்வாங்கியே கொடுத்தும்,

கணக்கர்சிலவெழுதார்க ளட்டார்கடுறவர்கடன்காரர்தாமறிப்பார், விருதுசீட்டுக்காரர் வைவார்கள்கொல்லரோ வெயிலிடை நிறுத்திவைப்பார், விதமாகுமவரவர்க ளெல்லாஞ் சபாசென்ன மெய்ப்பாய் நடந்துகொளினும், வரிசைபெறு திலைகளவ ரருமைசற் றறிவரோ மணவாளநாராயணன் மனதிலுறை யலர்மேலு மங்கைமண வா ள னே வ ர த வேங் கடாராயனே. (௨௮)

கவிவாணரருமையறிவா ரில்லாமை.

கற்பனை யலங்கார மாக்கோவை பாடினுங் கனவரிசை யொருகசசடம், கலம்பகங்கூறிலொரு துப்பட்டிபிள்ளைக் கவிக்கென்னி லொருசோமனும், நற்பொருவுலாவென் றுருமாலைமடலுக்கு நாணயமதாவொருபணம், நல்லண்ணமெஞ்ஞிலொரு சாப்பாடுமாலையெனி நன்மைதருதாம்பூலமாம், அற்புதம்பெறுகவிக னென்னிற்பளாபளா வதிகவெகுமானமாகும், அப்படியுமாயிரத் தொருவலென்றுமெங்க ளருமையெவரறிவர் கண்டாய், மற்பொருதுமல்லரோ முற்பொருதவீரனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடாராயனே.

இதனை யிவரறிவ ரிவரறியாரெனல்.

கீர்த்தனைகளின்மகிமை பாகவதரல்லால் கிரிக்குலவர் தாமறிவரோ, கீர்த்திப்பிரதாபமது விதரணிகரல்லாது கெட்டலோபிகளறிவரோ, சேர்த்துமநுவிங்யான நீதிமன்னவரலாற் சிலேவேடர் தாமறிவரோ, செய்யபகவற்கீதை மெஞ்ஞானியல்லாது ஜெனமதீசர்களறிவரோ, கோத்தமணிமாலையை மங்கையர்களல்லாற் குரங்குகண்டாலறியுமோ, கொக்கோகமகிமைதனை நாகரிகரல்லாது கூறுபேடிகளறிவரோ, வார்த்தையுசிதத்தைமந்திரிகளன்றறிவரோ மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடாராயனே. (௩௰)

பயனில்சொல்லி னிழிவு.

அகமென்று தன்னைப் புகழ்ந்த பேயுந்தங்கை தமன்னையர் வருத்தமுறவே. அயலார்தமக்குதவு பேயுமடவார்புத்தி யறுதினங் கேட்டபேயும், சுகமெனற பொதுமர் தனக்கூடி மனைவிவைத் தயரமே செய்தபேயும், துணிந்தரண களமுற்று முறிகின்ற பேயுமுன் சொன்னசிலே யென்றபேயும், ஜெகமன்னராமெனற தலமென்றபேயுமியல் செய்நன்றி கொன்றபேயும, திரளானசபைதனிற் பயனிலா வார்த்தையுரை செய்கின்றபேர்க்குநிகரோ, மகளென்றுகோசிக னைழுககமகிழ் தூயனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வ ர த வே ங் க டராயனே (௩௧)

எல்லைகடத்தலில் வருமிழிவு.

அரசர்மேலானைதலை யெண்ணுதமுடிகளு மாதாயமிஞ்சுசெலவும், அன்புடையபேர்புத்தி கேளாதகோபமு மலைக்கடங் காதநாவும், சரசவகைமிஞ்சவே வந்தபரிகாசமுந் தனைமிஞ்சு தொழிலாளரும், தைரியந் தனைமிஞ்சு கலையுஞ் சாட்சியோர் தமைமிஞ்சு முறைவழக்கும், காசர்

ணவயவன் தனைமிஞ்சுதேகமுங் கவியின்மிஞ்சிய வெழுத்துங், கருதுமுறைகேளாத மனையாட்டிபுணர்நாய கனதகைமையொக்குமென்பார், வரசரசகவிராஜர் புகழ்வேதகுலதிலக மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௩௨)

இவர்க்கு அமுதம் இவிடத்தியெனல்.

அண்டருக் கமுதமது சொர்க்கத்தில் வேதியற் கமுதமுது சொல்லுறையிலே, ஆனதவிராஜநுக் கமுதமணிநாவிலே யாவிற்கு மமுதமுலையில், பண்டிதர்க் கமுதமது கையிலே விதரணிகர் பங்கிலமுதங் கண்ணிலே, பாகவதருக்கமுது காதிலே பரிவுடைய பாங்கருக் கமுதமனதில், ஒண்டொடி யருக்கமுத மாமதிபு மொ நா லிலே யுகந்திடும் தேகமெல்லாம், உற்றபெரி யோர்தமக் கமுதங் குணத்திலே யுணர்வுடைய போர்க்கமுதமோ, மண்டலமளந்தவுன் பாதத்திலென்பர்காண் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. ()

இவர்க்கு விஷம் இவிடத்தெனல்.

திருடர்க்குவிடமெலாங் கையிலேகாமமிகு தெரிவைக்குவிடமுலையிலே, தீயபொய் யர்க்குவிட நாவிலே மதமுடன் றிரிவோர்க்கு விடங்காலிலே, கருதரியகோளர்க்கு விடமுதடுதன்னிலே காமுகர்விடங்கண்ணிலே, கட்செவிவிடங்கள் பல்லடியிலே தேட்கெனிற் கனவிடங்கடைவாலிலே, அரியதுஷ்டர்க்கெனி லெட்டிமா மென்னவே யங்கமெல்லாம் விடமதாம, அடுத்துக கெடுத்திடும் பகைவர்விட மனதிலே யம்பொன்விலைமாதருக்கு, மருவுவிடமல்குலிற் றெரியவசமன்றுகாண் மணவாளநாராயணன, மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௩௪)

இவர்க்குப்புண்ணிய மிதுவெனல்.

உன்னுடையபதசேவை கண்டுபணிகின்றதே யுடல்செய்தபுண்ணியமாகும், உரைதோன்ற கீதையின் சாரங்கள் கேட்பதே யுற்றசெவியின் புண்ணியம், தன்னுடையபுத்ரா ளிளைந்துசோ ருண்பதே சாற்றுநாவின் புண்ணியம், தத்துவமுணர்ந்தபெரி யோர்தமைக் காண்பதே சாந்தவிழியின்புண்ணியம், பன்னுமிரவலர்கேட்கு முனனங்கொடுப்பதே பாணியதுசெய்புண்ணியம், பதிவிருதமங்கைகுண மிக்கபுருடர்க்குப் பலிப்பதேவெகுபுண்ணியம், மன்னுமிவை முன்செய்த புண்ணியம தெனபர்காண் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௩௫)

இவர்க்குப்பாவ மிதுவெனல்.

திருந்துகற்பனையிலாப் புன்கவிகள்கேட்பதே செவிசெய்தபாவமாகும், செயநன்றுமையறியாத பேர்கண் முன்சேவகர் திரிதல்கால் செய்த பாவம், பரிந்தவுபசாரமதி லார்மனையுணவு பருகிறு வின்பாவமாம், சாவனையுமஞ்சுருதி நயமிலாப்பாதமது பார்த்தல்விழி செய்தபாவம், தருந் தமிழைபரியாத பேர்களிடமேற்கின்ற தலைமைபெய் செய்தபாவம்,

தன்பெயர் விளங்காத பிள்ளையைப் பெறுவதே தாய்வயிறு செய்தபாவம், வருந்துயர முன்செய்த பாவவினை யென்பர்காண் மணவாளநாராயணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௩௬)

இவர்க்கிவை அளவேனு மிவைவேண்டுமெனல்-

அதிவீரனெனலுந் தந்திரவுபாயமுட னடையலரை வெல்லவேண்டும், ஆயிரம்வித்தைகற் றாலுமூலகந்தனி லடக்கமதிருத்தல்வேண்டும், நதிகோடிநீந்திவந் தாலுமோடந்தனை நயந்துகரை சேரவேண்டும், ஞானதத்துவமுணர்ந் தாலுமூலசத்தி னடைக்கைதனை யறிதல்வேண்டும், நிதிசேர் குபேரனென் றாலுமொரு[illegible]பமுறு தொழிலுட னிருத்தல்வேண்டும், துய்யவல்லமையுடைய னெனுமொருசாற்பினற் றுணைகளைக்காணவேண்டும், மதியூகியென்னினும் பெரியற்சொற் கொளல்வேண்டு மணவாளநாராயணன, மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௩௭)

இவர்க்கிவை வேண்டாமெனல்.

பெற்றதாய்தந்தையுடன் சுற்றமேமுதலான பெரியோரைமுனிதல் வேண்டாம், பின்னொன்றுமுன்னொன்று பேசியேயவமான பேர்கொண்டு திரிதல்வேண்டாம், உற்றவர்கள்போதவுட் பகையானவஞ்சகரை யொருநாளு நம்பவேண்டாம், ஒருவருக்கிச்சையாய்ப் பொய்சொல்லிபின்சபையி லூமைபோல் நிற்றல்வேண்டாம், சற்றுமேபொறுமையில் லாதவர்கள் சண்டையிற் றான்போய் விலக்கவேண்டாம், தைரியந்தனில்விக்கிரமாதித்தனென்னினுந் தன்னையேபுகழல்வேண்டாம், மற்றொன்று மெண்ணாது செய்யல்வேண்டாமென்பர் மணவாளநாராயணன், மனதிலுறையலர் மேலுமங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௩௮)

இவர்க்கிவை பாவமெனல்.

அரசர்வெகு மானஞ்செய் போதுதடை வருகிலோ வன்றுவிடபாவமாகும், ஆனபெரி யோர்பழமை யாய்வந்த னேயமதை யல்லவேதத்தயோகம், தருகின்றகாரியங் கைகூடியேபின்பு தவரிலைவ திரிதியாகும், சற்குண மடைந்துளோ ருத்தமறை முனிவேத சந்திராஷ்டம தாகும், கருதியவிருந்தினுட னுண்ணாதவனியுணவு காணுமது வேதுரத்னம், கலகமேசெய்கின்ற வீணரைக்காண்பதே கனவாசசிய வேளைகண்டாய், மரீசிசுதனெனவந்த காசிபசிலோத்துங்க மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௩௯)

இவர் இத்தீக்கோளாவரெனல்.

தனாமக் கிளைக்கண்டு தங்கள் காரியமெலாஞ் சொல்லிசெய்கின்றவேளை, சொல்லெலாம் பொய்யெனவுமிவர்சாட்சி மெய்யெனவுந்தோன்றுவோ னவலமாகுர், திரமித்த கல்வியொடு குணமிக்க கவிராஜர் திரளானராஜசபையில், செய்புர்பிர சங்கந்தி லொருபழுது சொல்லுவோன் ஜன்மத்திலங்காரகன், அருள்பெற்ற விதரணி கைனக்காற்ற ணைசுநாள்

கொடுக்கும்பேர்தி விடர்சோலி விலக்குவோ னஷ்டபச்சனியனுகும், மருவுத்தலர்ந்தவம் புபமணியுமார்பனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௰)

இது இவ்வாறுயின் இச்சிறப்பிற்றுமெனல்.

தரணிமன்னவர்சபையின மிக்கின்றவரிசையே தனதுபட்டாபிஷேகம், சபாசென்றுமெச்சிக்கொடுக்குமதிகாரமோ சாம்பிராச்சியபோகமாகும், பரிவிடணினைத்தபடி காரியங்கூடிலது பதினென்றினிற்குருவுதாய், பந்துசனவர்க்கங்க ளுடனுணவுசெய்கின்ற பாக்கியமே கலியாணமாம், அரிவைகுணாஞ்சிதம ராய்வந்துசேவிநாளன் றமிர்தசித்தயோகம், அன்பானபெரியோர்க டரிசனஞ்செய்வதே யானைசுபதினமெனபர்காண், மரகதம்பூவைமுகி னீலமணிவண்ணனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௧)

மனிதர்களிலே துஷடரும் ராட்சதரும் பூதமும் இவரெனல்.

புண்ணியம்பாவமறி யார்மாதவஞ்செய்யார் புகல்கல்விநெறியுமறியார், புனிதரைப்போற்றார்கள் பரதிரவியங்கொள்வார் புன்மைசேர் துஷடராவார், பெண்ணியொருகாரியஞ் செய்பவர்கள்வலுமையாலெவருக்குமிடர்புரிகுவார், இரக்கமில்லாப்பொய் புரைப்பர்வஞ்சிப்பவர்க ளிவர்கள் ராட்சதர்களாவார், நண்ணியெளியோர்தமை வெருட்டுவார் வலியவரைநாடிவஞ்சனையில் வெல்வார், நாரியர்களெவரையுங் கூடுவார் மிகவுண்பர் நாணமறியாத பூதங்காண், மண்ணிலொருமூவடி யளந்தநெடு மாயனே மணவாள நாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமண வாளனே வரதவேங்கடராயனே. (௬௨)

மூர்க்கர் முதலோரியல்பு.

மெய்யானபுத்திபல சொல்லினுந்தன்புத்தி மேலாக்கினோன் மூர்க்கனும், மிக்கபெரியோர்களைத் தாழ்வுசெய் தற்பர்தமை மேன்மைசெய்வோன்மூடனும், செய்யாதகாரியஞ் செய்யினும்பிடித்தபிடி செய்யுமவனே துஷ்டனும், திரளானநன்றிபல செய்தவருக்கேயிட்டு செய்பவன்மகாபாதகன், ஐயர்வெண்பணிந் தாலுமேகோபம தடங்காதவன்குரூரன், அநுதினந்தீமைபுரி வோனெந்நாளிலு மடங்காதசண்டாளனும், பையார்தடஞ்சோலை திகழ்கின்றகளமூரின் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௩)

அப்படிப்பட்டவன் இவ்வங்க வீனனுவனெனல்.

காதவழியானதி மாதவந்துதியாத கயவனேயீனமூடன், கைதந்தவோலை வாசிக்கமாட்டாதவொரு கசடனேமிக்ககுருடன், தீதுபெற்றனகளவு கண்டவாக்குத்தாஞ் செப்பிலாதவனூமையாம், செயலானதன்மத்தை யொன்றேனுமறியாத செய்கையுடையோன் செவிடனும், ஏதெனினுமொருபேர் விளங்காததேகம தெடுக்குமவனேகுரூபி, நன்றெனினுமுன்பாத தரிசனஞ் செய்யாத வீணனே நீசனென்பார், மனமாது சத்

இயபாகமா தழுவுமணிமார்பனே மணவாளநாராயணன், மனதிலுறை
யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௪௪)

உலோபியர் வகை.

நசைபெற்றவேதியர் தமக்குதவிலாதவ னின்றலோபர்க்குநேயன்,
நாற்கவிமொழிந்த கவிராசர்க்குமொன்றேனு நல்கிடான் கொஞ்சலோபி,
இசைபெற்றகீதமுறை செய்பாடகர்க்குமொன் றீகிலான்பரமலோபி, இய
லானபட்டு ராசர்க்குமொன்றுதவிலா னேற்றமுக்காலுலோபி, இசை
பெற்றவிகடகவி ராசர்க்குமுதவிலான் றீபமுழுலோபிநடனம், செய்மாத
ரபிநயனங் கணடுமொன்றுதவிலான் சேர்பரமலோபிகண்டாய், வசைபெ
ற்ற லோபராதங்கள்கண்டிரவன் மணவாளநாராயணன், மனதிலுறை
யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௪௫)

உலோபியர் வஞ்சப்புகழ்ச்சி.

கண்டபகையாளிமுன் னின்றுபொருதாமற் களத்திற்புறங்கொடுப்
பார், கன்னமிடுகள்வருக் காடையும்பணிகளுங் காணமலேகொடுப்பார்,
சண்டமாருதமென்ன வருகின்றபஞ்சவர்கட மக்குமனையுங்கொடுப்பார்,
சவுக்கிட்டனுக்கின்ற மன்னர்க்குவீட்டுத் தனங்கடெல்லாங்கொடுப்பார்,
அண்டிவருமெமதூதர் வந்துதான்கேட்குமுன் னங்கமொடுமுயிர்கொடுப்
பார், அவனிமிசையிப்படி கொடுக்கின்றபேர்கடமை யதிலோபரென்ப
தென்னே, மண்டலமுழுவிண்டலமு முண்டகனிவாயனே மணவாளநாரா
யணன், மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடரா
யனே. (௪௬)

உலோபியர் குணமாறாமை.

தேன்கொண்ட தளியொன்றி ஞலேழுகடலெலாந் தித்திக்கவேசெய்
யினும், செய்யபூவலரினால் வச்சிரந்தன்னைச் சிறக்கவேபொடிசெய்யினும்,
கானகொண்டமலையெலாங் கைகொண்டவெண்ணெயாற் கவினுற்றமெரு
குசெயினும், கயவர்க்குநீதியும் பேடிக்குவீரமுங் கபடர்க்கு மெய்ஞ்ஞா
னமும், ஊன்கொண்டமூடர்க் கிரக்கமுந்தெளிவுற வுரைத்துநலமேசெய்
யினும், ஊசாமசெவிடன்குருடன் முத்தமிழ்படிக்கினு முலோபருக்கீவு
வருமோ, வானகொண்டதேகர்பொழி மலர்கொண்டபாதனே மணவாள
நாராயணன், மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்
கடராயனே. (௪௭)

மக்களிற்பதார வாரிவசொனல்.

கொண்டகடன்வட்டியுட னன்றுபோற்குணமாய்க் கொடுத்துபகிழா
தபதரும், கூறுபிணைகாட்கிமுறி யுடன்மறுத்தாலுங் கொடாதொழிக்
கின்றபதரும், கண்டவுடனொருகோடி சொல்லிப்பின்னொன்றேனுங் கரு
திச்செயாதபதரும், காணவிடத்தினிற் பழிகூறியவரையெதிர் கண்டு
புகழ்கின்றபதரும், பண்டொருவர்செய்நன்றி தனைமறந்துபின் பழி
சொல்லுகின்றபதரும், பராமாதராசையால் வசைகொண்டபதரும் பாங்
கு சேவுஞ், சிதறவேயண்டிவரு சண்டப்பிரசண்டமாருதமான மணவாள

நாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங் கடராயனே. (௪௮)

இக்குற்றமுடையோர்க் கிதுசெயல்வேண்டுமெனல்.

கத்திடுபபகைவரென் றாலுமாபத்தினிற் கண்டுதவிசெய்யல்வேண் டும், கல்வியறியாதசபையெனினும்பிரசங்கங்கள் கவிராசர்செய்யல்வே ண்டும், விதித்தமுழுமூடரென் றாலுந்தன்மைமாதர்க்கு வித்தைகற்பித்தல் வேண்டும், வெய்யசினமூர்க்கரென் றாலுநல்லோர்கண்டு மேற்புத்திசொல் லவேண்டும், அதிஷ்டமிலையென்னினுஞ் சலியாமன்மிக்கதொழி லதிலே முயற்சிவேண்டும், அசாத்தியமதானகன ரோகமென்றாலுமோ ரௌஷத மதீவர்கண்டாய், வசிஷ்டரொடுவான்மீக முநிதுசரித்திமனே மணவாள நாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங் கடராயனே. (௪௯)

இதினும் இதுமிக்கதென்ல்.

தினமூர்ந்திரிந்துதனி யாகியேமிக்கபொரு டேடியேவாழுமதிலும், செல்வரொடுதந்தைதாய் சுற்றமுங்கூடிச் சிறந்துண்டகூழ்நிகமாம், தன துமரியாதையொடு பெருமையறியாதபேர் தன்மாரிபொழியுமதிலும், சமமான்மேன்மைதெரிகின்றபெரியோர்தந்த தாம்பூலமேயதிகமாம், கன மருவுபமபல மகாவித்தைசிலசில கருத்தொடுபடிக்குமதிலும், கருணை பெறவொருவித்தை யாயினுங்குறைவறக் கற்கின்றதேயதிகமாம், மனி தர்சிகரிவையதிக புத்தியெனபர்காண் மணவாளநாராயணன், மனதிலு றையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௫௰)

இதினுமிது வெற்றியென்ல்.

மிக்கதுடிகண்டுளம் வெருண்டுகலைமானையே வென்றுசெயமாகுமதி லும், வெஞ்சினமிகுந்துகவரும் புலியுடன்பொருது மெய்கொண்ட வடி வேசயம், பக்குவமுதிர்ந்தபேரிளமாதுகொங்கைகயிற் பரிவுடன்சேருமதி லும், செம்பொனமணிமாலைபுனை வாலசியூடலிற் பாததாடன்மேசெ யம், தக்கதொருகல்விநெறி யறியாதமுழுமூடர் சந்தோஷமாகுமதிலும், தமிழருமையறிகின்ற பெரியோர்பழித்தசீர் தனையதேசமெனெனபர்காண், மைக்குவளைசெங்குவளை வாசமலர்களூரின மணவாளநாராயணன், மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௫௧)

இது இதனை வசப்படுத்துமெனல்.

சிந்தைதெளிகல்வியே லோகவசியம்பத்தி செய்வதேதெய்வவசியம், செயயுமரியாதையே வித்வசனவசியமாஞ் செல்வமுறவோர்கள்வசியம், எந்தவிதமுந்திர ளாநல்குபணங்களே யிசைசன்லைமாதர் வசியமாகும், எப் பொழுதுமவர்மன மறிந்துகட்டிக்காத் திருப்பதோராசவசியம், தந்ததன் டனைகளே துஷ்டசனவசியராந் தானமேகீர்த்திவசியம், சாந்தகுணநயமாய் நடந்திடுமொழுக்கமே சகலசனவசியமாகும், மந்திரமெழுத்தெட்டு மே யுனதுவசியமாம் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கை மணவாளனே வரதவேங்கடராயனே. (௫௨)

இச்செய்கையோர் இச்சிறப்புப்பெயர் கொள்வரெனல்.

சரணென்றடைந்தவர் தமக்குவருவினையெலாம் தாங்குவோன் புருஷமேரு, தன்னுடையசெய்கைபோ லெவரையும்பார்க்கின்ற தகைமையோன் றெய்வபுருஷன், திரணமேனும்பிறர் பொருட்காசையில்லாத செய்கையோன் புருஷோத்தமன், தீராதவினைவரினு மற்பரைபபணியாத தீரனேபுருஷசிங்கம், பொருவிலாதந்தைதா யென்னினுங்கண்டபடி புகலுவோனபுருஷரதனம், போற்றுமவர்மனதிற் குறிப்பறிந்துதவுவோன புருஷநாயகமென்பர்காண், மரபெலாமிப்படி புகழ்ந்தகுணசோரன் மணவாளநாராயணன், மனதிலுறைப்லர்மேலு மங்கைமணவாளனே வரத வேங்கடராயனே. (௫௩)

இச்செய்கையோர் இவ்வழிபெயர் பெறுவரெனல்.

சற்றெனினுமொருகல்வி யறியாதகயவனே தாங்குமுயிர்கொண்டமரமாம், தன்புத்தியென்றும்பிறர் புத்தியால்வினைசெயுந் தகைமையோனே பதுமையாம், கொற்றவர்கள்பலகையாற் றூரத்துண்டுதிரிகுவோன் கூகையிறவானபட்சி, கோபமது தந்தைபோ லன்றிமற்றோரையுங் கோபிக்குமவன்மிருகமாம், கற்றபெரியோரையெதிர் பணியாதமூடனே கைகால்முளைத்தசிலையாம், கண்டவர்களெல்லாம் பழிக்கின்றகோளனே கனதுஷட சந்துவென்பார், மற்றவர்கணேயமது கனவிலுங்காணாத மணவாளநாராயணன, மனதிலுறையவர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௫௪)

கல்விப்பொருட்சிறப்பு.

தெள்ளமுதமனைய கல்விபொருள் படைத்திடிற் றேசமெல்லாந் திகிக்கும், செயத்தாமபமானபுகழ் நிற்குமிவையெலாஞ் செம்பொன்மிகு செல்வமதுபோல்; வெள்ளமுதுகொளுமெனும் பயமில்லைகனவிலுல் வெம்பவருகலனுமில்லை, வேந்தர்கள்பறித்திடக் கூடாதுசோதரர் விரும்பினும்பங்குறாது, கள்வர்சாற்றிருடவும் முடியாதுவரவரக் கன்மலாற்குறைவுறாது, கருணைஞானந்தழையு மாகையாலுனையிதய கமலத்தில்வைப்பதெளிதாம், வள்ளலெனவருகின்ற மாடபூசியாதிபன் மணவாளநாராயணன்; மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௫௫)

கவித்வ சிறப்பு.

உரைகொண்டுசொல்வரிசை தேர்ந்துபொருளின்பவகை யோகசபெற்றேமதுரமாம், உற்றநவரசமுடன் கற்பனையலங்கார மூண்டாகியேகவுடமாம், நிரைகொண்டசீர்தளை விகற்பபொருந்திநன் னீதியாய்க்கடைதுடிப்பாம். நிரைகின்றசபைதனிலு தாரணைமதாசநிலை நின்றுபழுதன்றிடாமல், திரைகொண்டதண்கடலில் வருகமுகபாகமாய்த் தேசபசித்தியாகச், செப்புமொருகவிகொண்டு குலமெலாம்வந்தடிமை செயினுநிராகாதுகாண், வரைகொண்டுபொழியுமழை காததருளுமையனே

மணவாளநாராயணன், மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனேவரதவேங்கடராயனே. (௫௭)

தந்தீவினைப்பயன்.

திங்களுதயங்கண்டு மலராதிருப்பது செழுங்கமலமுற்ற வினையே, தினகரனை யெதிர்கொண்டு முலகங்கொண்டுவாடுவது சோதாம்பல்செய்தவினையே, கொங்குலவுசெண்பக சுகந்தமலர்கண்டுமருள் கொண்டது சுரும்பின்வினையே, கொண்டன்மழைகண்டுள மெலிந்திடவருந்துவதுகோகிலஞ்செய்தவினையே, அங்கணுலகெங்கனு மகிழ்ந்துபெரி யோர்களுக்கருளாதிருந்துவிடினும், அவர்மீதுகுற்றமது சொல்வரோசேர்ந்தவரதிஷ்டமென்பார்கள்கண்டாய், வங்கியந்தருமிசை கனிந்தகனிவாயனேமணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனேவரதவேங்கடராயனே. (௫௮)

அரசர்கவிவாணர்க்குச் செய்யுமுபகாரம்,

போசனஞ் சந்தமலர்மாலைதாம்பூலம் பொருந்துவத்திரபூஷணம், புரவியொடுசுவிகையுஞ் சிவிகைகரிவாத்தியம். பூமிமனைதனதானியம், தூசுலவுதுவசமெனும் வெகுமானசோடசந் தாதரால் வரவழைத்தல், தோன்றுமுன்னெழுதல் வந்தருள்கெனத் தழுவுதாறுதித்திடவிருக்கையுதவல், நேசவெகுமானங்கள் செய்தெழுதல்வழிவிடுத லிறையங்கிகாரமேழாம், நெறிகொண்டபுவிராசர்கவிராசர்பாற்செய்யுநீதிமுறையென்பர்கண்டாய், வாசவன்பெறுவிசயசூதனெனுநாதனே மணவாளநாரணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௫௯)

புல்லர் நல்லோர் குண மறியாரெனல்.

சந்தனவனந்தனி லிருந்துமதன்மணமதைச் சற்றுமறியார் கிராதர், தாளங்குளிக்குமவ ரதன்மாலையணியார்கள்சங்குமணிதன்னையணிவார் கந்தமலிதாமரை யடுத்துமண்டூகங்களுஞ்சேறுதனையருந்தும், காமருவுமோவின் மிசையிருந்தாலுமோ காகமதுவேம்புநுகரும், அந்தவகைபோல நல்லோர்தமையடுத்தே யனேகநாட்பழகிவிடினும், அற்பர்தாமறிகின்றதறிவதல்லாமன்பற் றவர்மகிமை யறிவார்களோ, வந்திடுகணந்தன்னிலவர் பெருமையறிகின்ற மணவாளநாராயணன், மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௰)

புல்லரைப்பாடும் புலவர்பயன்பெறுமை

நாவினிற்சொல்லு நயமுங்கண்டுவஞ்சகனாடகப்பென்றுவருணேயரும், நவமதனனென்னவெழில்கண்டுபேடன்றன்னைநாடிவருமடமாதரும், காவினிலுயர்ச்சியும் பசுமையுங்கண்டிலவு காத்திருக்கின்றகிளியும், கானலைக்கண்டுபுனலென்னவேயாசையொடுகருதியேயேகுமானும், பூவினிற்பொலிவுமணமுங்கண்டுகேதகி பொருந்துதேனுடுமளியும் புல்லர்தஞ்செல்வங்கள் கண்டுதுதிசெய்திடும்புலவர்செயலொக்குமென்பார், மாவினிற்குயில்

வேளைவாவெனுங்களமூரின்மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௧)

மேலோர்செயல் கீழோர்க்காகாமை.

எந்தவினைசெய்தாலுமுனிவோர்கண்மாதவமிசைந்தாற்பெறுமை பெறுவரா, இகழ்ந்துவசைசொல்லினுங் கவிராசர்வித்தையா லென்றுமிகு மேன்மைபெறுவார், சிங்கதமமகமாயொன்றுவழுவினுந்துரைகள்செந்திருவினாற்புகழ்சிறப்பார், சீரியர்களெப்படிபுரிந்தாலுமேற்குமதுசிறுமையோர்செய்யவசமோ, தந்தியதுநெறிதப்பியேநடந்தாலுமது தன்னைமதயானையென்பார், தானுமப்படிஞமலிசெய்கிலோபேயென்று தள்ளிமுனிவோர்கள்கண்டாய், மந்திசெறியிடபகிரி தனலிலுறைவாசனேமணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௨)

இது இல்லையாயின் இதுவிளங்காதெனல்

சந்திரனிலாவிரவு மதுரமில்லாதகவி தனயரில்லாதசெல்வம், சற்சனரிலாதவூர் புரவியில்லாதபடை தளபதியிலாதசேனை, பைந்தொடியிலாதமனை பாடலில்லாவோசை பத்தியில்லாதபூசை, பார்த்திபரிலாதபட்டணம்யூகிமந்திரிகள் பற்பலரிலாதவாசல், கந்தமில்லாதமலர் சத்தியமிலாதவாய் கல்வியில்லாததேகம், கனவினயமில்லாதநியோகிசுசியில்லாத கன்மமுபதேசமில்லா, மந்தரமிவைவித்வசன மில்லாதசபையென்பர் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. ௬௩)

சங்கீதச்சிறப்பு.

புருவநெரியாமல் மணியெயிறுதோன்றாமல்விழி புரளாமலங்கசேட்டை, புரியாமனமிருதலையை யசையாமன்மிடறுதான் பொருமிவிம்மாமலியல்பாய்ச், சுருதிலயை சுரஞான நீதியொடுவினையின் றொனியினுதப்பிரமமாய்த், துய்யதந்திரியோசை மிடறோசையெனவேறு தோன்றாமலின்பமயமாய்த், தருமதுரவமுதரச மொழுகுசாரிகள்பழகு சங்கீதவித்தையென்றால், சகலர்க்குமானந்தமாகுமது பாடுமவள்சரசகுண வஞ்சியெனிலோ, மருவியிதழ்பருகியணை யாமலுயிருய்யுமோ மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௪)

பாதச்சிறப்பு.

பாதாளமுஞ்சுருதியடங்கமிகுதொனிசெயும் பண்புபெறுவோன் மத்தளி, பலராககீதமொடு தாளங்கொள்கனவிதம் பாடுவோனேபாடகன், காதாளமேனமனமு நடனபாதத்தின்மேற் கண்ணுமுடையோனட்டுவன், கையினமேல்விழியுமக் கைவிழியினபிநயங் காட்டுமவளேபத்திரம், சுரதாளலயமார்க்கமாகுமிங்கிதபதஞ்சொல்லுமவனேபரிசனம், துதிபெற்ற நடனப்பிரசங்கத்தில் வேறுதொனிதொனியாத சபையேசபவராதாள

முடனாவிகடன்மிடுபாதனேமணவாளநாராயணனன்மனதிலுறையலர்மே லுமங்கைமணவாளனே வரதவேங்கடராயனே (௬௫)

நாடகச்சிறப்பு.

சுகந்தபரிமளவஸ்திர பூஷணலங்கிர்தசோடுமுத்தீப்புவெண்டுந், தோகையர்களுமபரி சனங்களுமகூடியே சொற்படிநடத்தல்வேண்டும், மிருந்தாஸ்தாளிகரும்புதேனமுதலானமேன்மைபோலினப்ரசமாம், வேஷவகவந்தமுஞ்சாதியும்பாஷையும்வெவ்வேறிருத்தல்வேண்டும், புகழ்ந்தபதமிங்கிதம் பரிகாசவிகடங்கள் புண்ணியகதாப்பிரசங்கம், போற்றுபாவாணாமிகுராகதாளஞ்சுருதி புகல்கின்றபாதநடனம், மகிழ்ந்திடுஞ்சபைதேவர்சபையெனறுசொல்வர்காண் மணவாளநாராயணன் மனதிலுறையலர்மேலுமங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௬)

விநோதவித்தைச்சிறப்பு.

சத்திகணபதிதுர்க்கைசரசுவதிமகாகாளி சாமுண்டியென்றுவராழ்த்தி, சங்கமொடுசயகண்டிடக்கைகைத்தாளங்கள் சத்தமொடுமிகமுழங்கச், சித்ரமிகுமாத்திரைக்கோலின்முறையங்கமுறை செப்புமுறைபத்துமுறைகள், செய்யுமுறைபறுபத்து நாலுகசகரணங்கள் சேர்ந்தகோகரணமார்க்கம், வித்தைபுரிஸ்தம்பனம் தாதியாயட்டாங் கவிதமா மகேந்திரசாலம், மிகுமிந்திரசாலமுதலானசெப்பிடுவித்தைதமேனமையவர்தந்திரநீதி, மத்தகஜராஜதேவேந்திறுந்தெரிவனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௭)

பௌராணிகர் முதலியோர்சிறப்பு,

ஆருக்குமானந்தமாகவேபொருள்சொல்லுமவனேபுராணநிபுணன், அங்கமொடுகிரகநிலைகணிதமுந்தெரிகுவோ னருள்புரோகிதபூசுரன, சீருற்றசபையெலாமெச்சப்ரசங்கமுறைசெப்புமவனே வித்துவான், செய்யுமந்த்ரயந்த்ரதந்த்ரமொடுமிக்கசுபசீலனேமந்த்ரவாதி, எருற்றகல்விகுணமேன்மைபொனறபோதங்களிசையுமவனுசாரியன், எனறுமவர்சொற்படிநடந்துபயபக்தியோடிருக்குமவனேசிஷனும், மாருக்குவேதாந்தவாசனேநேசனே மணவாளநாராயணன். மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௬௮)

மருத்துவனியல்பு.

திரமானசாத்திரமுணர்ந்தொருசிகிச்சையதுசெய்திடவமைத்தபின் போய்த். தேசகாலஞ்சாதிதேசங்குணம்பிணி சிறக்குமாறுந்தெளிந்து. காமானநாடிமுதலெட்டுப்பரிட்சையுங் கண்டுகற்கங்கியாழம, ககனகுளிகைபற்பமொடுசெந்தூரஞ்சூரணங் கருதுலேகியதைலமாம், பரமானநன்மருந்துங்கொடுத்துசிதமாய்ப் பத்தியமுமெளிதாகவே, பரிவுபெறுமாரோக்கி

யஞ்செய்துதிரளாசைபகராதபண்டிதனெனின் வரமானதன்மந்திரிக்குங்க கர்கொல்வர்காண் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலுமங்கை மணவாளனே வரதவேங்கடராயனே, (௬௯)

ஈனர்மருத்துவனுக்குச் செய்யுமுறைமை.

சேர்க்கின்ற கனரோக முற்றால் வைத்தியன் தெய்வமாம் கேட்ட தெல்லாம், திரள்கொடுப்போமென்பர் திரும்பிப்பிணியென்று செப்பினு லன்றுகுருவாம், பார்க்கின்றகுளிகையது தந்தபின்றந்தையாம் பாதிலகு வானபின்பு, பண்பாயதுணைவனு ரோக்கியஞ்செய்தபின் பகர்கின்றமைத் துனனுமாம், ஏற்கின்றமற்றைநா ணேயன்மறுநாளினி லிசைந்தகடனாளி மறுநாள், எதிர்வரிற்பகையாளி யாகுமிப்படியெண்ணு மீனர்சிலருண்டு கண்டாய், வார்க்கின்றதானமொடு வளர்கின்றவள்ளலே மணவாளநாராய ணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்க டரா யனே, (௭௰)

ஆராயாதுசெய்யு மெழுவரடையுங்கதி.

நீதிவழுவாவகை வழக்குரைப் போர்களு நிறைந்ததீ வினைகளெல் லாம், நீங்குபரிகாரமுறை செய்குவோரும்பிணி நிறுத்தவருபண்டிதர்க ளும், சோதிடஞ்சொல்லும் புரோகிதருமுலகந் துதித்தசெங்கோல்வேந் தரும், தூயவுபதேசதே சிகருமவர்சிஷருஞ் சொல்லுமவ்வேழுபேருர், ஆகமறைநூலிலுரை செய்தவிதமாராய்ந் தறிந்துதெளியாதுசெயிலோர், அடைக்கலப்பொருளைக் கவர்ந்திடுமவரிலு மகோரநரகடைவர்கண்டாய், மாதிரநெடுங்கடல் வளர்ந்தநெடுமாயனே மணவாளநாராயணன், மனதி லுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௭௧)

நித்திய கருமச் சிறப்பு.

கருணைநதி மூழ்கியே சந்திவதனமுடன் கருதுசப தபவோமமும், கடவுளோர்பூசையும் செய்துவேதாகமக் கல்வியதுமுறைபடித்துத், தரு மத்தியானநற் கருமமாநீதியொடு தந்தைதாய் புத்திரருடன், தானுணவு செய்தி ராமாயணம் போற்றியே சந்தியொடு கருமநண்ணி, பரிவுடனே நினதிருக் கோயில்வலமாகிப் பணிந்துபத சேவைசெய்து, பண்பானசந் திரோ தயத்தின்மலரணைமீது பாரியுடனேமகிழ்ந்து, மருவியேவாழுமில் வாழ்க்கையே வாழ்வுகாண் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மே லு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௭௨)

குடிவாழ்க்கைச் சிறப்பு.

மிகுகதெய் வத்தலமு ஞானகுருபீடமும் விளங்குமா நதியுமறை யோர், மேவிபகிராமமும் பூமிகலமுந்தனமு மேலரசுமுடைய நாட்டின், முக்கனி தருஞ்சோலை நீர்வளங்குடிவள முயங்குபயிர் வளமுமுளதாய், ரிந்தநற்குலமுஞ் செறிப்பதாய்த்தேர்வீதிமுதலாய்விளங்குமூரில்,

தக்கதொரு வீதியொரு பானடுவிசாலமாய்ச் சார்ந்தசிங்கார மனையில்,
தனதானியங்களவை முதலானசெல்வங் தழைத்தென்ன தானமுதவி,
மக்கண்மருமக்களொடு வாழ்வதே வாழ்வுகாண் மணவாளநாராயணன்,
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே, ()

மருத்துவர் செல்லத்தகாத விடங்கள்.

தீராதரோகமுடை யோரிடமுமுண்மையது செப்பாதபொய்யரிட
மும், சீரானவொருவர்பண் டிதமன்றிவெகுவிதஞ் செய்துகொள் வோர்க
ளிடமும், வராதகோபமுறு மூர்க்கமன்னவரிடமு மேந்நிலையு மனது
பிரியா, இன்பமாமதிவிரக மானகாமுகரிடமு மெப்படிநலஞ் செய்யினும்,
தாராதலோபரிட மும்பத்தியந்தனைத் தாழ்வுசெய் வோர்களிடமும், சக
லசெனகண்டக ரெனுந்துஷ்ட ரிடமுமிகு தனமாரியே பொழியினும், வா
ராதிருப்பதே பண்டிதர் நணீதிகாண் மணவாளநாராயணன், மனதிலுறை
யலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (எச)

நோய்க்கிடங்கொடார் செய்கை.

சனிபுதன்றனிலெண்ணெய் வெந்நீரில்மூழ்குவார் சாருமிளவெயில்
விரும்பார், தம்வயதுமேலான மங்கையைச்சேரார் சதாகாலம்வழியி
னடவார், பனியிலுங்காற்றிலும் மெய்வருந்தார்மடைப் பள்ளியிற்சேவக
மிரார், பழங்கறியருந்தாரிரண்டடககாரொன்று பலகாலமும்விட்டிடார்,
கனியொடுகிழங்குகண் மிகுநதுபுசியார்பல கலந்தன்றியுணவு செய்யார்,
காய்ச்சுபாலுண்பர்நீர் மோர்கூட்டுவார்தினங் காவேரிதனின்மூழ்குவார்,
மனிதரிவர் பேர்சொன்ன பேர்க்குநோய் சேருமோ மணவாள நாராய
ணன், மனதிறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே.

தந்தைமுதலியோராவார் இவரெனல்.

நிலமுடன்கிரகமுஞ் செல்வமுந்தந்துகட னிலுவையொன் றில்லா
மலே, நிறைகல்வியுரைசெய்து நெறியொடுவளர்க்கின்ற நேசனேதந்தையா
கும், கலைமதிய மெனவே வளர்ந்தபின் செல்வங்கள் கண்டுமிக மனமகிழ்
ந்து, கருதரியபுத்திரன் போலமரு மகளையுங் கருணைசெய் பவளன்னை
யாம், பலகலை யுணர்ந்துமிகு செல்வமுந்தேடிப் பகிர்ந்துதன் பேர்விளங்
கப், பண்பானதந்தைதாய்க் குதவியேயவர்சொன்ன படிசெய்குவோன்புத்
ரனும், மலர்பொழி செழுஞ்சோலை மலைவளருமாயனே மணவாளநாரா
யணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கட
ராயனே. (எரு)

நற்புதல்வ னியல்பு.

அரிதானமாதவஞ் செய்கின்றமுனிவோ ரடைந்திடுவரந்தனைப்போ
ல், அடுத்தவர்தமைககாத்துமிக்கமேலவர்தமையடக்குமுன் சக்கரம்போ
ல், பெரியோரிருக்கின்ற சபைதனிற்கவிராசர் பேசுமப்பிரசங்கமதுபோல்,

பேருலகமெய்த்தவரு மனுநீதிமுடிவேந்தர் பெறுகின்ற மாகீர்த்திபோல்,
ஒருகோடிநட்சத் திரங்களுடனடுவே யுதித்தசந் திரோதயம்போல, உபய
குலசுத்தனும் பகீரதன்போலவே யொருபிள்ளை போதுமவனால், மரபெ
லாமன்மையே படையுமென்பார்கள்காண் மணவாளநாராயணன், மனதி
லுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (எஎ)

சகோதரவொருமை.

தனதுபட்டந்தனைத் தம்பியர்க்கீயெனத் தந்துமகிழுந்தமையனும்,
தமையனார்வருமளவு மாவிரதமாகவே தபசுபுரியுந்தம்பியும், கனதனப்
பலியித்த தாய்தனைப்போலவே கருணைசெய்திடுமதனியும், காணுமுன்
றந்தைபோற் றிருவடிகள்பணியுங் கனிட்டனும்மனையாட்டியும், இனந்தி
னப்பரிவாகி யம்மையேயெனவுபேர் செப்புங்கொழுந்தனுகுர், சேர்ந்து
வாழ்கின்றபேர் திரேதாயுகந்தனிற் றசரதகுமாரர்கண்டாய், வனசமலர்
மகிழ்கின்ற வாவிசூழ்களமூரின் மணவாளநாராயணன், மனதிலுறையலர்
மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (எஅ)

வெட்டகத்தினியல்பு

காரியக தனைத்தந்த மாமனார் மனைதனிற் கருணைமரு மகன்வந்தி
டில், கண்டவுடனுசார வுபசாரமாகவே சனவிருந்துகள் சமைப்பார். சே
றுநாள் மூன்றுகி லமரபட்சந்தனிற்செனித்த சந்த்ரோதயம்போல், தினந்
தினம்பெருமைகுறை யுங்காரியங்களுஞ் செய்யென் பாத்தைமுதலோர்,
ஆருமெண்ணார்கண்மைத் துனர்சரசபரிகாச மதிகமாமனைவியெனிலோ,
அனபுடனசொன்னபடி சேளாளிராகையா லாதியொரு கதையல்லவோ,
வாருமென றவரோவ வசனமுஞ் சொல்வர்காண் மணவாள நாராயணன்,
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. ()

மனங்கெட்டுப் பிழைப்பவரிவரெனல்.

நேசமுறசிறுமிதன துறவினன்மருகன்மனை நிலையென்றுவாழ்ந்தபே
ருர், நேரிழைதனைத்தந்த மாமனார்மனைதன்னி னீங்காதிருந்தபேரும்,
பேசரிபகல்விதெரி யாமூடர்பேரிற் ப்ரபந்தகவி சொன்னபேரும், பெரு
மைபோய்க்கள்ளக் கடன்களேபட்டுப் பிழைத்துயிர் சுமந்தபேருர், வச
வருபகையாளர் தங்கண்முன்கைகட்டி யேவல்செய்கின்றபேரும், ஈனம
துபார்ப்பதிரா வயிறுசாதனன்றிவர்க் கென்சாணுவயிறுகண்டாய், வாசம
லர்மங்கைகுடி கொண்டுவளாகளமூரின் மணவாளநாராயணன், மனதி
லுறைபலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (அ௰)

கற்புடைப் பெண்டீரியல்பு.

ஒவ்வுஜபபூசைகட் கினியகுற்றேவல்க ளூக்கதுசேய் போதுகுருவாம்,
உடைகொண்டசரசஞ்செய் போதுமன்மதனுலொழிந்தவேளைதெய்வமாம்,

நாதனைக்கருதியவ னுண்டகுறையமுதாக நவில்வதேயுபதேசமாம், நதியாடல்பலநோன்பு தேவதாதரிசன நயந்தபலவிரதரூபவன், பாததரிசனமாக்கொள் சுத்தியாய்ப் புத்தியாய்ப் பத்தியாய்க் கடலினுழும், பாரொன்று கணவனிலுறை செய்யினுஞ் செய்கின்ற பதிவிரத மார்க்கமான, மாதர்புகழ்நீதியே கதிபெற்றதல்லவோ மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (அக)

நற்பெண்டீரியல்பு.

பஞ்சணையினருகாக நின்றுவாவென்றபின் பரிவினுடனருகில்வந்து, பாக்கிலைமடித்தசுருளீந்து மெத்தையில்வந்துபரிமளமிகத்திமிர்ந்து, கொஞ்சிமலர்சூடியிசை பாடிவிளையாடியே கொக்கோகவிதமறிந்து, கூடியிதழிருவோரு முறைபருகியினியபுட் குரலோசைமிகமுழங்க, நெஞ்சமகிழ்வொடுசுரத காணகரிகரவுபரி நேயாதிகேளிதன்னால், நிறையமிர்தபோகவை போகமுடனீங்காத பேரின்பமோசமுதவும், வஞ்சியினலாதுமனம் வேறொன்றின்பகிழுமோ மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (அஉ)

தீப்பெண்டீரியல்பு.

ஐயருக்கமுதுபடை யென்றவர்தாய்நீயு மாண்பிள்ளை யென்றெண்ணவோ, அரிசியெங்கேபாளை சட்டியெங்கேயென்ப ளவள்சொன்ன வகைகளெல்லாம், ஐயயவேகொண்டுவந் தாலுஞ்சமைக்கப் படாதுதலைநோகுதென்று, பாயிற்கிடப்பள்சின மாயொன்றுபேசினாற் பாருனக்கேற்றபுத்தி, செய்யவல்லேனென்பள் சற்றடித்தாலஞ் சுகின்கிறேன்கூகூவெனத், தெருவீடுதோறுமுறை யிடுபெண்டிருண்டெனிற் றியமன்வேறுமுண்டோ, வையகர்புகழ்சோலை மலையலங்காரனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே (அங)

பரத்தையரியல்பு.

கொச்சியுறமஞ்சள்வங் காளமுறபச்சைபிலை கூறுசண்பகமொட்டுடன், கூடியநலங்குமஞ் சனமாடிபொற்கணடை கொண்டவெண் டுகிலுடுத்துக், கச்சிளங்கொங்கைமேற் கந்தபரிமளகளப கஸ்தூரிகுமுகுமென்னக், கனகநவரத்நமய பூஷணம்பூண்டுகிளி கையின்மிசை யேந்திநலமாய், பச்சைமதிபோலிரதி வேளைக்குமிடிசரச பரியாசநகைபுரிந்து, பண்பானமேடையுப் பரிகைமிதிருக்கும் பரத்தையுண்டாவளென்றால், வச்சிரதாணுலகத்த ரப்பையிலுமதிகமா மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே, (அச)

ப்ரௌடை வேசையரியல்பு.

ஆசையுடனொருவிரகபுருஷன்வந்தான்மிகவு மாசாரவுபசாரமாய், ஆசனந்தனிலெழுந் தருளுமென்றருகிருந் தழகானவொருதட்டிலே, நேசமொடுதாம்பூல முதவியேயவனுடைய நெறிகண்டுவாவழைத்து, நீதியாயந்தநாள் வந்தநீர்பின்பெனை நினைத்திலீ ரென்கொலென்று, பேசரியசங்கீதஞ் சரசசல்லாபப்ர சங்கமொடு ரதிகேளியில், பிரியமுடனேயணைந் தின்பமாயுசிதம் பெறிற்ப்ரௌடை வேசையென்பார், வாசமலரணிகின்ற பராங்கிசோதரன் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கை மணவாளனே வரதவேங்கடாயனே. (௮௫)

பரத்தையரிழிவு.

விலைமாதர்வீடு சவுளிக்கடை படுக்கையது மேவுமனைபொதுவம்பலம், மெத்தையதுசந்தியிற் பாறையவரங்கமோ மேவியபடித்துறையதாம், கலைமருவுமவரல்லு லோடமாமிருகொங்கை கடையிலெலுமிச்சம்பழம், கனிவாய்படிக்கமிருதுடைகடண்ணீர்ப்பந்தல்கட்டுதலிககம்பமாம், முலைமார்புவாடகைக் குதிரையிடையேணியவர் மோகமெனிலெட்டிக்கனி, மொழிமுயற்கொம்புசே ரின்புவெங்கீராமை முறைமையினைவகண்டிருந்து, மலைவுபெறுவார்கள்ரச வாதிற்குநேயனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடாயனே. ()

சரீரநிலையாமை.

ஆகாயமீதினி லெறிந்தகிலைகாற்றினை யடர்த்திலைத்திடுதருத்தி. அனலிட்ட மெழுகுவெயி லிடையிட்ட வெண்ணெய்கழி யாற்றிடையெழுந்தகுமிழி, மோகாவிகாரமொடு வருகின்றமின்னல்விழி மூடுதுயில்கண்டகனவு, மோதிவருகாற்றினிற் றீவிழுகிடுபஞ்சு மூச்சோடுகின்றபதுமை, மீகாமனில்லாத கப்பல்கண்ணிமைபோல விளங்கவருதேகமிதனை, மெய்யென்றுமெய்யலாம் பொய்யென்றுதிரிகின்ற விழலனெனையாளநினைவாய், மாகாளமுகிலனைய மெய்யனேதுய்யனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடாயனே. ()

நல்வினைசெய்வோர்பேறு.

ஓதுமாதாபிதா குருதெய்வவிசுவாச முடனதிதிபூசைசெய்வோர், உற்றபரதாரசேவ தாமாகுலோரதிக மொருவர்க்கு மெண்ணிலாதோர், பூதயவுள்ளோர் சகாயமேபுரிகுவோர் பொய்யிலா வாய்மையுடையோர், பூர்வமாந்தருமபரிபாலனம்பண்ணுவோர் பூஞ்சோலைநர்தனவனம், பாதையிடைமண்டபங் கூபந்தடாகநீர்ப் பந்தன்முதலாய்புரிகுவோர், பண்பாமிவர்க்குமலை போல்வந்தவினையெலாம பனிபோலநீங்கியமாய், மாதவமுருகதவன் பாதமே பெறுவர்காண் மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடாயனே. (௮௮)

மாதர் அவயவமயக்கு.

சிக்குமிகவேநாறுகின்றகுழன் முகிலென்பர் திரளுந்தைமாறுதவாய், செப்பவள மென்பர் களிகொண்டநீர்மாறாத சிறுநாசிகுமிழதெனபார் பக்குவமாதனத்தி விழுகின்றமுலையானதோர் வெபமயபகமேருவெனபார், பாராதநரகத்துவாரமாங்குழிதனைப் பாரின்பவாரியென்பார் பக்குவிரத்தமுளுசியுமிளமுன்போர்த்தமேனிமலர்மாலையென்பர், மீளாதநரகந்தருஞ்சிறியவின்பமதைமேலின்பவீடென்பரிம், ஷமக்கருங்கடலிலெளவிழாமலாளுவாய்மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலுமங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (அஅ)

நீதியின்பெருமை.

வித்தையே செய்திடுங்குருபீடமொனனலனாவென்றுவருகின்றதளவாய், மித்திரர்கள்பகைவராமேலவர்களேயமா விந்தைபுரிதாளுவதி, புத்திரலமே சொல்லுமாதிமந்திரியாவரும் புகழ்சின்றவசியகுளிகை, புளகமுலைமாதருக்கதிருபவின்பம் பொருந்தவருகாமதேனு, நித்தலும்பெருமையேசெயுமாசுதான்மொழியு நிலைசெய்ததக்ககூஷராா, சேர்ந்தமிடியென்கின்றமாதங்ககேசரிதனைத்தெல்லாங்கொணர்ந்தே, வைத்திடுகுலதெய்வநீதியன்றிவேறேது, மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (அகூ)

உயர்ந்தபொருளிருக்குமிடத்துஇழிந்தபொருளுண்டெனல்.

கோகனகமலர்மலர்ந்துறுகின்ற வாவியிற்கொட்டியுமலர்ந்திருக்கும் கோகிலந்தொனிசெயுந்தேமாதனந்தனி றகூறுவாய்பட்சியுறையுமச்சமைவுலகம்புறந்தமன்னவர்சபையிலினமன்னவர் மேவுவார், இலகுமாணிக்கங்கள் விற்கின்றகடைவீதியிற்பாலைடணியும்விற்பார், பாகனை யமதுராசமிளிசப்ரபந்தகவி பாடுமன்னவர்கள்சபையில். பழங்காடிதனிலும்புளித்தமிழ்கவிசொலும்பாவலருமுண்டுகண்டாய் மாகனகமுறையுமொரு மணிபணியுமார்பனே மணவாளநாராயணன், மனதிலுறை யலர்மேலுமங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (கூய)

சேர்ந்தவினத்தின்குணம்பெறுவோர்பெறுதோரிவரெனில்.

சோதிநவரத்னமணிமாலை யிடை நூலுந்தலங்குமணியாய்விளங்கும் சுரைப்பழந்தன்னுடன்சேர்ந்தசெம்பொனனுந் தருமபுபோலேமிதக்கும், வீதிபெறுகுப்பையி லிருந்தாலுமாணிக்க மெய்மழுங்காதொளிவிடும், மிகவுஞ்செழுந்தேன் சொரிந்தேன் வளர்ந்தாலும்வெள்ளுள்ளிநாற்றமாறுதாதலாற். சேர்ந்திடுமினங்களைப்போல வெய்யவனியிலிருப்பர்சிலபேர், ஆர்சொல்லினுந்தங்கள் சுயகுணம்விடாமலேயமைவுற்றுவாழ்வர்சிலபேர் மாதர்துகில்கொண்டொரு குருந்தேறுமாயனே மணவாளநாராயணன், மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனேவரதவேங்கடராயனே. (கூக)

வல்லோர்க்கும்புல்லோரால் தாழ்வுவருமெனல்.

பரராஜர்வச்ரமகுடந் தகர்த்திடுகத்திபஞ்சுமெத்தைதக்குநாளும்பணி ராஜர்மணிமுடிகள்சிதறநடமிடுதோல்க பச்சோந்தியானடுங்குமகாராஜர் மார்த்தண்ட சந்திரகிரணங்களொரு கட்சவியினன் மறைபடும், கனைத புரிவிகடதடமத்தயாதங்கமொரு கனல்சிறிதுகண்டுபயமாய், சுரராஜசங் கர்ப்பமாக நிசருற்றுமொரு துய்யசிலையான்மறிபடும், சொல்கின்றபெரி யோர்களென்றாலுமற்பராற்றோல்விகொடுமுனிவர்கண்டாய், வரராஜதசர தமகாராஜபுத்திரனே மணவாளநாராயணன், மனதிலுறையலர்மேலுமங் கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௯௨)

நல்லோர்புகழ்நிலைபேறு.

விசயன்மனுவுடனிட்சுவர்குகுசநாபன்விகுட்சிரசுகாகுஸ்தனும்மிகு மம்பரீஷன் மாந்தாதனமுசுகுந்தன்விசாலனேதிரணவிந்து, சசிவிந்துவொ டுசிவிபன்னரிச்சந்திரன சர்வதாமன்பரதனே, சற்றனுநளன்சத்தியவிரத ன்பகீரதன் சக்ரனெடுதானதனனன், தசரதன்மருத்துப்புரூரவன் சென்னியே திரிசங்குவுடன்யயாதி, சித்ரதேனன்வீரசேனன்ருதுபன்னி ந்திரசேனன்விதுரன்பாண்டர், வசுதேவனாதியோர் புகழன்றிநின்றநிலை ம ணவாளநாராயணன் மனதிலுறையலர்மேலுமங்கைமணவாளனே, வரத வேங்கடராயனே. (௯௩)

தீயோர்பழிநிலைபேறு.

சூரனொடுபானுகோபன்றிரிபுரத்தினோர்தாரகனேமதுகைடவன்துர் துயகிடாசுரன் ரர்பரசலந்தராதூஷணன்றிரிசிரகரர் விராவணகும்பக கர்ணனிந்திரசித்துமிகுகன்கனிரணியாட்சதன், வெய்யவாதாபியில்வலனு டன் சூர்ப்பநகைலேவுமசமுகிதாடகை, தாருலவுசிசுபாலதந்தவக்கிரர்ச ராசந்தனோடடல்கீசகன், சகுனிதிரியோதனன் கஞ்சன்முதலாயினோர் த ங்களபகீர்த்தியல்லால், வாவிசூழ்புவியில் ளர்கொடுமைநிலைநின்றதோ மணவாளநாராயணன்மதிலுறையலர்மேலுமங்கைமணவாளனேவரதவே ங்கடராயனே. (௯௪)

வானம்பிரசித்ன்முதலானோரியல்பு.

ஒருபொழுதுமவமேயிராம நற்றருமமங்களுணர்வுடன் செய்துமனை யா-ளொடுகாமமின்றியுன்பாதங்கள்போற்றிவன் முறைநன்வானப்பிரஸ் தன்-கருமமுடனுனதுபகவற்கீதைதுதிசெய்துகாமமுதலாறுமூன்றார், க ருதாமலொருபோதுசுவைநீக்கியே யுண்டகருணையோன்சந்நியாசி இரு வினையுமவை செய்ததுஞ் செயச்செய்ததுவுமின்பமுங்கனதுன்பமும்; எ ண்ணரியசாதிமரபும்பலவுமுன் செய்கையெண்ணியேபடிகடொழுது,வரும வினையவதாத மெய்ஞ்ஞானியென்பர்காண் மணவாளநாராயணன் மனதிலு றையலர்மேலுமங்கைமணவாளனே வரதவேங்கடராயனே. (௯௫)

உத்தமர்முதலானோரியல்பு.

வினயமுட னன்னமுஞ்சு கமேஷமுமென்ன வித்தையுரைதன்னைய
றிவார், மிருதாஙழகற்கன்னமலர்போன்மரபு விதமாய்விளங்கவருவார்ப
ணையின்றெடுநாளிகோங்கமுகமென்னவே பரிந்தவர்க் கன்புகூர்வார், பனச
மூஞ்சூதமும் பாடலமுமென்னவே பண்பினுடனுதவிசெய்வார், சினமரு
வினீரெழுத் தொடுமண லெழுத்துடன்சிலையெழுத்தெனமாறுவார் செப்பு
மிவர்தனையாதியமத்தமாய்ப் பார்க்கவேயிந்ததனிலாய்ந்துபுவிமேல்மனி
தருத்தமர்கண்மத்திமாதமர்மூவர்காண் மணவாளநாராயணன் மனதிலு
றையலர்மேலுமங்கைமணவாளனே வரதவேங்கடாராயனே (கசு)

தேசங்களின் பெயர்கள்

அங்கமத்திமாராளவஞ்சாலு வங்கேக்யாரியம் பாரசீனம், ஆந்திர
மாராடமேகன்னடமிடங்கணமவந்தியோடு சேதிகுகுதம், கங்கைநிகழ்
காஸ்மீரமச்சங்காரந்தங்க ரூசமேசூரசேனம், மெலிக்காடுலங்காளநேபா
ளசிங்களங்கனத்ததுளுவங்குழப்பு, மொங்கணம்போடந்திரிகர்த்தப்பு
ளிந்தங்குளிந்தங்காரடமதகம், குச்சரர்பம்பம்விதற்பமவிராட்சிரங்
கோசலஞ்சிந்து கௌடம், வங்கமும் பணிகின்ற கருடகிரிவாசனே மண
வாளநாராயணன்மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே வரதவே
ங்கடாராயனே (கஎ)

தேசமுதல் அண்டமளவாகநிற்குநிலை.

ஒட்டமுறுசாதகஞ்சல் வீரபாஞ்சாலமோங்குமிடதங்கடாரம், உகந்
தரஞ்சோனகஞ்சினகாந்தாரமோ டுமலையாளசங்கம், இட்டமுறுத்ராவி
டம் சோளபாண்டியமாதி யென்ணேழுதேசமாகி, இலங்குபரதக்கண்ட
மாதிநவகண்டங்க ளேய்ந்தசமபூத்தீவுமே, அட்டதிலசபெற்றதீவேழுபூ
லோக மிஃதாதியேலேழுலோகம், அதிலமேயாதகீழேழுலோகங்க ளி
வையனையுமீதோரண்டமாம். மட்டிலாவண்டங்களுனதிருவயற்றிலுரும
ணவாள நாராயணன்மனதிலுறையலர்மேலுமங்கைமணவாளனே வரத
வேங்கடராயனே. (கஅ)

பதினெண்கணங்ளிவையெனல்.

தேவருடனசுரர்கள்சித்தர்க டமித்தியர்சிறந்தகிம்புருடர்கருடர்செய்யசந்
தருவர் கின்னரரிராக்கதர் பூதர்தீதல் வேதாளமுனிவோர். மேவுவிஞ்
சையருரகர்தாரகரியக்கரேமேலுமாகாசவாசர், மிருபோகபூமியோரமு
தலாய்பதினெட்டுவிதமானகணநாதரும், பூவையர்களுங்கண்டுதுதிசெயுந்
திருமலை புகழ்ந்துகோனேரிமூழ்கிப், போற்றியுன்சந்நிதிவணங்கியேதுதி
யாதபுன்ஜனனமுஞ்சன்னமோ, மாவலியணிந்தசெம்மணி மகுடபாதனே
மணவாளநாராயணன் மனதிலுறையலர் மேலுமங்கைமணவாளனேவரத
வேங்கடாராயனே. (ககூ)

பரமபாகவதராவாரிவரெனல்.

சுகனொடுவியாசன்பராசரன்சவுனகன் றய்யநாரதவசிட்டன், துங்க வான்மீகிமாவலிருக்குமாங்கதன்சுக்கிரீவன்மாருதி, தகுமிட்சுவாகுவிடும னுடன் பிரகலாதனனகுசேலன்விஜயனே. தருமனொடுமுசுகுந்தனக்குரு ரன் பணிஜடாயுவுடனம்பரீடன், அகலிகிரிசகடைமாது பாஞ்சாலிசபரிமு ன்னழைத்திட்ட கவிராஜனே. ஆதிராமாநுஜதிருவரங்கத்தமுதராழ்வா ர்கள் பன்னிருவரும், மகிமைபெறுமுன்னோடா பாதமேதுணைகொள்ளு மணவாளநாராயணன்மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே வர தவேங்கடராயனே. (௱)

அடியார்க்குவருஞ்சிறப்பு.

உனதுபாதம்போற்றுமடியார்கள்சிந்தையிலுவந்துமேயென்றமுதலாய் உன்னுடையதிருமாதரோண்மருஞ்சேர்வரவருற்ற தானிதிகள்சேரும், க ணநிதிகள்சேர்ந்திடத்தனதன்வருவானுடன் கருணைபுரிநேயனவருவான்- காதலனடுத்தலுமைவருவளன்னையாற் கந்தன்வருவன்மருகனெல், தனது மாமன் மருவனரசன்வாலாலமார் சகலருங்கண்டுவருவார், தருமஞ்செ ழிக்குமருள் சேருமதுவன்றிபேதமொன்றுசெயல்வேண்டுமோ, வனச சோருகமலர்மடந்தைதளர்களமுறின் மணவாளநாராயணன்மனதிலு றையலர்மேலு மங்கைமணவாளனே வாதவேங்கடராயனே (௱௧)

அவையடக்கமும்பிரார்த்தனையும்.

ஒருமலையெடுத்து மழைகாத்தவாமனதேவருபயபதசேவைதனையே உளங்கொண்டுவேண்டுமணியில்லாமூழுத்தலாயனுதவுநாரணபாகதிபொ ருமலை பெருங்கையுங்கானியாறும பொருந்தகடல்போற்புலவர்கள், புக ழ்சபையிலெனதுவேங்கடசதகநீதிநெறிபுகலவருநூறுகவியுட்புரிவினுடம னைவருங் கேட்டுமென்றமிழின் மேற்பசுந்மைவத்தாளவருவாய், பாலக ன்புன்சொலைக்கேட்டுமேமகிழுமவள்பார்மீதிலன்னையலவோ, வருபவர்க ளிக்கல்வாமுதவுநேயனேமணவாளநாராயணன்மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனேவரதவேங்கடராயனே (௱௨)

திருவேங்கடசதகம்'

முற்றிற்று.